Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jan. 12 : 515 Nos.
  - Up to Dec. 11 : 508 Nos.
- **Performance Jan. '12 ...**
  - Turnover growth : 5.93%
  - Employment growth : 1.6%
  - 100% Attendance : 9.19%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




### தீங்கு இளைக்காதிருங்கள்

முன்னொரு காலத்தில் ஒரு திமிர் பிடித்த எலி இருந்தது. மற்றவர்களை தொந்தரவு செய்வதே இதன் பொழுது போக்கு! ஒரு நாள் அது ஒரு குட்டி மரத்திடம் சென்றது. ஹேய்... மரமே நான் உன்னை வேரோடு பிடுங்கி எறியப்போகிறேன். ஏன் என்னை இப்படி செய்கிறாய். நான் உனக்கு என்ன பாவம் செய்தேன் என்று மரம் கேட்டது. அதை காதில் வாங்காத எலி மரத்தின் அடியில் இருந்த மண்ணை தோண்ட ஆரம்பித்தது. பயந்து போன மரம் "யாராவது வந்து என்னை காப்பாற்றுங்களேன்" என்று கதறியது. குட்டி யானை ஒன்றின் காதில் இந்தக் கதறல் விழுந்தது. அது ஓடி வந்தது.

நிலைமையை அறிந்த குட்டியானை ஓடிப்போய் கற்கள் மற்றும் மண்ணை கொண்டு வந்து மரத்தின் கீழே போட்டது. இப்போது குட்டி மரம் நன்றாக நிமிர்ந்து நின்றது. நன்றியால் நிறைந்த மரம் குட்டி யானைக்கு நன்றி கூறி நிறைய பழங்கள் கொடுத்தது. யானையைக் கண்ட எலி ஓடிப்போய் மரத்திற்கு கீழே தோண்டிய பள்ளத்திற்குள் ஒளிந்து கொண்டது. யானை மண்ணையும், கல்லையும் வாரிக்குவித்ததில் வெளியே வரமுடியாத எலி மூச்சு முட்டி இறந்து போனது.

ஆம் நண்பர்களே! நாம் ஒரு நாளும் மற்றவர்களுக்கு தீங்கு செய்ய நினைக்கக்கூடாது. நினைத்தால் எலியின் கதி தான் நமக்கும். ஒருவருக்கும் தீங்கு செய்யாதபடி நமது செய்கைகளை குறித்து நாம் எச்சரிக்கையாய் இருந்து நீதியை விதைத்து மெய்பலனை அடைகிறவர்களாய் இருக்க வேண்டும்.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

### ஏழ்மை

ஒரு அப்பா நகரத்தில் வாழும் தனது மகன் ஏழ்மையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். ஊரைச் சுற்றிக் காட்டிய பின்பு கேட்டார். "மகனே... ஏழ்மை என்றால் என்ன என்பது தெரிந்ததா...?"

மகன் பதில் சொன்னான். "நன்றாகத் தெரிந்தது அப்பா...

நம்மிடம் ஒரு நாய்தான் இருக்கிறது. அவர்களோ நான்கு வைத்திருக்கிறார்கள். நமது வீட்டில் ஒரு சின்ன நீச்சல் குளம்தான் உள்ளது. இவர்களுக்கோ ஒரு ஆறே இருக்கிறது.

நமக்கு இரவில் வைக்க ஓிரு விளக்குகள்தான் இருக்கிறது. அவர்களுக்கோ நட்சத்திரங்கள் இருக்கின்றன. நம்மிடம் கொஞ்சம் நிலம் இருக்கிறது. இவர்களோ வயல்களின் சொந்தக்காரர்களாய் இருக்கின்றார்கள். நமக்கு வேலை செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். இவர்களோ அடுத்தவருக்கு உதவுபவர்களாய் இருக்கிறார்கள். நாம் உணவை வாங்குகிறோம். அவர்களோ விளைவிக்கிறார்கள். நம்மைப் பாதுகாக்க வீடு இருக்கிறது. அவர்களுக்கோ நண்பர்கள் இருக்கிறார்கள்."

மகன் பேசிக் கொண்டே போக தந்தை வாயடைத்து நின்று கொண்டிருந்தார்.

மகன் தொடர்ந்தான். "நன்றி அப்பா... நாம் எவ்வளவு ஏழையாய் இருக்கிறோம் என்று காண்பித்ததற்கு...!"

Compiled by Mr. Shahul Hameed Bava
Facilitation

## FUNCTIONAL WISHES




**Holi**
**8th March**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
Tech. Consultant: Dr.G.S. Viswanath
Central Excise : Mr. R. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital
Tel:22294565
M/s. Jeya Clinic,
Tel: 98408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. E. Sekar** **Mar 03**
Production

**Mr. S.K. Murugan** **Mar 14**
Administration

**Mr. S. Sivasubramanian** **Mar 15**
Marketing

**Mrs. M. Bhavani** **Mar 17**
Administration

**Mr. A. Sabapathy** **Mar 24**
Administration

**Mr. P. Parthasarathy** **Mar 25**
Production

**Mr. S. Arokya Raj** **Mar 27**
Production

**Mr. K. Balaji** **Mar 27**
Project

**Best Wishes from Tiaano Employees**

### கான்.:.பிடன்ஸ் கார்னர்

அந்த அரசர் ஓய்வு பெற விரும்பினார். அதற்குமுன் நல்ல இளைஞன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து முடிசூட்ட முடிவு செய்தார். பல சுற்று பரிசோதனைகளுக்குப் பிறகு இருபது இளைஞர்கள் தேறினார்கள். எல்லோரிடமும் சில விதைகளைக் கொடுத்தார். இந்த விதைகளைத் தொட்டியிலிட்டு அழகிய பூஞ்செடியாய் 2 மாதங்களில் வளர்த்து வருபவர்களுக்கே அரச பதவி என்றார்.

இரண்டு மாதங்கள் போயின அழகிய பூந்தொட்டிகளோடு இளைஞர்கள் வந்தனர். ஒருவனின் தொட்டியில் மட்டும் எதுவுமே விளையவில்லை. “அவன்தான் அரசன்” என அறிவித்தார் அரசர். பிறகு சொன்னார், “எல்லோருக்கும் வேக வைத்த விதைகளைக் கொடுத்தேன். மற்றவர்கள் ஏதோ விதைகளைப் போட்டு விளைய வைத்தனர். இவன்தான் உண்மையாய் இருந்திருக்கிறான்”.

உண்மைக்கே உலகம் முடிசூட்டி மகிழும்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### What about you?

| Positive | Negative |
|---|---|
| Thinks about The solution | Thinks about the problem |
| Never short of ideas | Always has excuses |
| Helps others | Expects others to help him |
| Sees a solution for every problem | Sees a problem in every solution |
| The solution is difficult but possible | The solution is possible but difficult |
| Considers accomplishment as commitment | Accomplishment is not more than a promise |
| Has a dreams to achieve | Has illusions and bundles of scattered dreams |
| His slogan: treat people as you like them to treat you Sees hope in The work | His slogan: deceive people before they deceive you Sees pain in the work |
| Looks at the future and thinks of what is possible | Looks at the past and thinks of what is impossible |
| Chooses what he says | Says what he chooses |
| Discusses strongly in a delicate language | Discusses weakly in a rude language |
| Adheres to values and gives up trivial | Adheres to trivial and gives up values |
| He makes events | Events make him |

Compiled by : Mr. S. Siva Deepan
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### How to find the fake note ?




1. **See through Register** : The floral design printed both on the front (hollow) and back (filled up) in the middle of the vertical band next to the watermark window has the denominational numerical “100”.

2. **Identification Mark** : A triangle with improved intaglio print that helps the visually impaired to identify the denomination.

3. **Watermark** : The Portrait of Mahatma Gandhi, the multi directional lines and an electrolyte mark showing the denominational numerical 100 appear in this sector.

4. **Omron anti-Photocopying Features** : A banknote with this feature, when copied by a colour photocopier, gives an output with a different colour shade.

5. **Latent Image** : The vertical band contains latent image showing the numerical 100 when the banknote is held horizontally at eye level.

6. **Micro lettering** : The letters, “RBI” and numeral “100” can be viewed with the help of a magnifying glass in the zone between the Mahatma Gandhi portrait and the vertical band.

7. **Security Thread :** 2mm wide security thread with inscriptions hindi letters and “RBI” and exclusive colour shift form green to blue when viewed from different angles. It will fluoresce in yellow on the obverse under ultraviolet light.

8. **Intaglio Printing** : There is a floral design visible from front side.

Rupees comes from the Sanskrit word ‘Rupa’ which means Beauty.

Compiled by Mr. K.R. Arun Kumar
Finance

## Back Pain Problem






This is something which we are not focusing in our daily life but can produce multiple problems in spine especially for those who have long sitting hours. Make sure that when you sit in your office chair your wallet should be not in your back pocket (Not only Wallet don’t sit with anything in your back pocket).

Your wallet can be real pain for your back and the waist, and it can even lead to shooting pains down the legs. Sitting on a wallet for prolonged hours every day can compress sciatic nerve which passes beneath piriformis muscle and leads to piriformis syndrome, low back pain & self-inflicted sciatica.

The wallet acts as a wedge that forces the pelvis, spine and body out of alignment. Just as you would not sit on a brief case or a rock for an extended period of time, you should not sit on your wallet. Anyone who drives more than a half hour sitting on a wallet is a candidate for sciatica or back pain.

The healthiest option is to move the wallet to your front pocket. If it’s must to keep your wallet in your back pocket, you should remove it before you sit down.

Compiled by : Mr. M. Siva Kumar
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி VIII)

**ஐந்து குள்ளர்கள்**

‘5S’ என்று செல்லப் பெயரிட்டு அழைக்கப்படும் ஜப்பானியர்களின் இந்தச் சூத்திரங்களை, உலகம் முழுவதும் ஏராளமான நிறுவனங்களும் தனிநபர்களும் செயல்படுத்தி வெற்றியடைந்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான பணம் இதனால் மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், இப்படிப் பெரிய அளவில் பலன் தரும் இந்தச் சூத்திரங்கள், அடிப்படையில் மிகவும் எளிமையானவை என்பதுதான் முக்கியம். இவற்றை உணர்ந்துகொள்ளவோ, செயல்படுத்தத் தொடங்கவோ விசேஷமாக எந்தப் பயிற்சியும் தேவையில்லை நன்கு புரிந்துகொண்டு உடனே பின்பற்றத் தொடங்கிவிடலாம்.

காரணம் – இந்த ‘5S’ குள்ளர்களில், யாரும் நமக்குப் புதியவர்கள் இல்லை. நமக்கு நன்றாகத் தெரிந்த, பழகிய, ஆனால் சில காரணங்களால் நாம் பின்பற்றாத நல்ல பழக்கங்கள்தான் அவை.

இதனால்தான், ‘5S’ தத்துவங்களைப் படிக்கப் படிக்க, ‘அட, இது நமக்குத் தோணலியே!’ என்று ஓர் அசட்டுச் சிரிப்பு நமக்குள் தோன்றுவது நிச்சயம். மெலிதான அந்தக் குற்றவுணர்ச்சியைச் செயலாக்கிவிட்டால், அங்கேயே ‘5S’ன் வெற்றி ஆரம்பமாகிவிடுகிறது.

அதென்ன 5S? யார் அந்த ஐந்து சித்திரக் குள்ளர்கள்?

Cont...4

## கவிதைகள்

### வண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்...!

பட்டொளி வீசி வானில் பறக்குது வண்ணக்கொடி,
எத்தனை எத்தனையோ தியாகத்தின் சின்னக்கொடி.
தீரப்பெரும் செம்மல்களின் தியாகம்,
அன்று நம்மை வீர குடியரசாக்கியது.
நாடுகாக்கும் வீரர்களின் அயராத உழைப்பு,
இன்று நம்மை நிம்மதியாக வாழவைக்கிறது.
நன்றி சொல்வோம் நாம் இந்நன்னாளில்,
நாளும் மனதில் வைப்போம்
அவர்களின் நல்வாழ்வை.
உழைப்போம் உறுதியோடு
நாமும் நாடும் வலமாக,
இந்தியக் குடியரசு உலகின்
முடியரசாக மாறும் நலமாக...!
வந்தேமாதரம் வந்தேமாதரம்...!!!

Compiled by : Mr. M. Kumar
Design

### நம்பிக்கை...!

வலிகள் பல இருந்தாலும் – அதன்
வடுக்கள் நம்முடன் தொடர்ந்தாலும்
தோல்விகள் துரத்தினாலும்
நம்பிக்கை ஒன்றை மட்டும் எடுத்திடு
வரும் காலம் உன்னோடு என்று போரிடு...
என்றும் இறைவன் உன்னோடு
என்றும் என்றென்றும்...!!!

Compiled by : Mr. D.S. Anish
System Admin

### அறிவிப்பு

➞ நமது நிறுவனம் குட்டீஸ்.com என்ற புதிய இணையதளத்தை நமது குழந்தைகளுக்காக உருவாக்கி உள்ளது. எனவே அனைவரும் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கைக் குறிப்பு போன்ற விவரங்களை (www.tianode.com/kutties) என்ற இணைய முகவரியில் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

➞ நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (kutties@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இப்படிக்கு
விழாக்குழு

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

### ஒழுங்கு

'5S' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த ஐந்து சூத்திரங்களின் பெயர்களைக் கேட்டாலே, அவை எந்த நாட்டில் பிறந்தவை என்பது புரிந்துவிடும்.

- செய்ரி (Seiri)
- செய்டன் (Seiton)
- செய்சோ (Seiso)
- செய்கெட்ஸு (Seiketsu)
- ஷிஸுகே (Shitsuke)

ஜப்பானிய மொழியில் இந்த ஐந்து வார்த்தைகளுக்கும் என்ன அர்த்தம் என்பதைப் பார்ப்பதற்குமுன், இந்த ஐந்து பெயர்களுமே 'எஸ்' என்கிற உச்சரிப்பில் தொடங்குவதை கவனித்திருப்பீர்கள். '5S' என்கிற பெயரின் பின்னணிக் காரணம் அதுதான்.

இப்படி எல்லாப் பெயர்களும் மோனை நயத்தோடு அமைய வேண்டும் என்று ஜப்பானியர்கள் விரும்பிச் செய்தார்களா, அல்லது யதேச்சையாக இப்படி அமைந்துவிட்டதா என்று சொல்வதற்கில்லை. ஆனால் இந்தச் சூத்திரங்கள் உலகப் பிரபலமான பிறகு, பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவற்றைச் சட்டென்று நினைவில் வைத்துக்கொள்ள, இந்த'5S' பெயர் ஒற்றுமை வசதியாக இருந்தது.

அதுமட்டுமில்லை. '5S' என்கிற இந்தப் பெயரை நியாயப்படுத்துவதற்காகவே, ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளிலும் கூட, 'S'ல் தொடங்கும் வார்த்தைகளை மெனக்கெட்டுத் தேடிப் பிடித்தார்கள்.

உதாரணமாக, செய்ரி, செய்டன், செய்சோ, செய்கெட்ஸு, ஷிஸுகே என்ற ஐந்து ஜப்பானிய வார்த்தைகளின் அர்த்தம் மாறாதபடி, அவற்றை ஆங்கிலத்தில் இப்படி மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

- Sort
- Set in Place
- Shine
- Standardize
- Sustain

இப்படிக் கவித்துவமாக ஏகப்பட்ட ஆங்கில '5S' வடிவங்கள் கிடைத்தாலும், அவை முனைந்து தயாரிக்கப்பட்டவை என்கிற லட்சணம் வெளிப்படையாகப் பல்லிளித்துவிடுவதால், பெரும்பாலானோர் ஒரிஜினல் ஜப்பானிய வடிவங்களையே பின்பற்றுகிறார்கள்.

தொடரும்...

### INNOVATION OF LOW COST FRP STORAGE TANK
**(OUR NEW PRODUCT)**

